**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2026-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 -ம் நாள் வியாழக்கிழமை

**<u>O.S. No.107/2024</u>**

வாதி தரப்பு சாட்சியாகிய PW.1 ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கல்யாணி | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | காசிநாதன் | கிராமம் | : | ஓகை |
| | | | தொழில் | : | கூலி வேலை |
| | | | வயது | : | 55 |

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் வசித்து வரும் இடத்தை நெடுஞ்சாலைதுறைக்கு சொந்தமானது என்று கூறி காலி செய்ய பிரச்சனை செய்து வருவதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கு சொத்தினை முன்னாள் உரிமையாளரிடமிருந்து பதிவு செய்யப்படாத கிரய ஆவணம் மூலம் பெற்றதாக சொல்லியுள்ளேன். அது அவர்களின் பெயர்களை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் அவரது பெயர் கணேசன் ஆகும். எனது முதல் விசாரணை சாட்சியத்தில் அவரது பெயரினை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. நான் எனது வழக்குரையில் சொல்லியது போல் பல நபர்கள்நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளதாகவும் அதை அப்புறப்படுத்திய பிறகு தான் எனது இடத்தை அப்புறப்படுத்த வேண்டும் என்று சட்டப்படி கோர இயலாது என்றால் சரியல்ல. நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான இடத்தில் யார் ஆக்கிரமிப்பு செய்திருந்தாலும் அவர்கள் அப்புறப்படுத்த வேண்டியவர்கள்என்றால் சரியல்ல. நான் குடியிருந்து வரும் இடம் நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமானது என்றாலும் அது சட்டப்படி அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. நான் வழக்கு சொத்தை எனக்கு உரிமையானது என நிரூபிக்கும் வகையில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யாததால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.05 17:52:58 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.